உ



வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட
உயர் சைவ வேளாண் குலத்திலகம்
அமரர்
# திருமதி. மங்களநாயகி பொன்னம்பலம்
அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த
# நினைவு மலர்
## 26.02.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்

இல்லறத்தின் இனியவராய்

தூய்மை கொண்ட நெஞ்சுடனே

கடமை தவறா மனைவியாக

பாசமிகு தாயாக பண்புமிகு மாமியாக

அன்புமிளிர் பாட்டியாக

இன்முகமும் இன்சொல்லுமாக

வாழ்ந்திருந்து மறைந்த

அன்னையின் பாதக்கமலங்களில்


இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

-குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அலர்ந்த மலராக
1927 . 01 . 13

உதிர்ந்த மலராக
2009 . 01 . 27

அமரர்

# திருமதி. மங்களநாயகி பொன்னம்பலம்

## திதி நிர்ணய வெண்பா

நீடும் சர்வதாரியினிலாண்டு தைத்திங்கள்
கூடும் பூர்வபக்கப் பிரதமையில் – பூங்குழலாள்
சீர்மலியும் மங்களநாயகி நீராரும் நிமலனடி
பார்புகழும் கைலையிலே சேர்ந்திட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயக வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி
போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகல மாண்பினர்
காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா நீக்கி நுழை
தரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலையமர்ந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாயப் பரந்த வெம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிவதேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சீராரும் சதுர்மறையும் தில்லை வாழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரும் மணிமன்றுள் எடுத்த திருவடி போற்றி.

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனை மேவி
இனியதானிணைப்பை இருபோதும்
இதயவாரி திக்குளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர்காம வெற்பிலுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே.

## பட்டினத்தடிகள் பாடல்

மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே- நாதா
இரும்பையூர் வாழ் சிவனே இன்னமோரன்ன
கருப்பையூர் வாராமல் வா

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி.மங்களநாயகி பொன்னம்பலம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

அன்னையாய் அமைவதும் நன்று. அன்னையை அடைந்திருப்பதும் நன்று. ஏனெனில் 'இறைவன் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் தான் இருந்து அன்பைப் பொழிவது சிரமம் என்று தான் தாயைப்படைத்தான்' என்பது யூதப்பழமொழி. இதற்கேற்ப ஒரு அன்னையின் வாழ்க்கையை எழுதுவதும் சிறப்பு.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்பது ஔவையாரின் திருவாக்கு. இறைவனின் திருவருளை இலகுவில் அடைய மானிடப் பிறவியே சிறந்தது. முற்பிறப்பின் தொடர்ச்சியாய் வடமராட்சிப்பகுதியில் வியாபாரி மூலை எனும் திருமலியும் ஊரில் அருணாசலம் சுப்பிரமணியம், இராசபூபதம் நாகலிங்கம் இருவருக்கும் மூத்த மகளாக முதல் முத்தாக மங்களநாயகி 13.01.1927 ல் பிறந்தார். அரசி என்ற செல்லப்பெயருடன் அருமகளாய் வளர்ந்த போது அவருடன் உடன்பிறப்புக்களாய் மூன்று ஆண் சகோதரர்களும், சகோதரி ஒருவருமாக வீடுமுழுவதும் கலகலப்பாக இளமைப்பருவம் இனிதே கழிந்தது.

மங்கைக்கு மணப்பருவம் வர மணநாள் காண விழைந்தனர் பெற்றோர். இவருக்கு சண்டிருப்பாய் தமிழ்ப்புலவர் சேனாதிராசா முதலியாரின் வழித்தோன்றலாக வதிரியூரில் பிறந்த மதுரைத் தமிழ்ச்சங்க தமிழ்ப்பண்டிதர் திரு.ஆறுமுகம் பொன்னம்பலம் (முன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஆசான் திரு.இருதயக் கல்லூரி) அவர்களை மணம் பேசித்திருமணம் புரிந்தனர். இல்லறமே நல்லறமாய் இனிதாய்க் காலங்கள் உருண்டோடின. கணவரின் தொழில் நிமித்தம் தன் பிறந்த மண் மறந்து புகுந்த இடம் சென்று வாழ வேண்டியேற்பட்டது. பிறந்த வீடு, சகோதரர், சுற்றம் எனப்பிரிவின் சோகத்தை மனதிலும் கணவரின் வாழ்விலும் தாழ்விலும் துணைநிற்கும் மகிழ்ச்சியை நினைவிலும் சுமந்து புகுந்த இடத்தில் வாழப்புகுந்தார்.

புகுந்த இடமும் ஆலமரமென மைத்துனர்கள், மைத்துனிகள் புடை சூழ இருந்தது. திருமதி.கதிராசிப்பிள்ளை கணபதிப்பிள்ளை. (காலமாகிவிட்டார்), திருமதி.இரத்தினம் சோமசுந்தரம் எனும் மைத்துனிகளின் அன்பிலும், திரு சின்னத்துரை (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், காலமாகிவிட்டார்), திரு.கணபதிப்பிள்ளை.(ஓய்வு பெற்ற கூட்டுறவு ஆணையாளர்), திரு.இராசரத்தினம்(ஓய்வுபெற்ற பிரதம எழுதுனர்) திரு.அருளானந்தம் ( ஓய்வு பெற்ற பிரதம எழுதுநர்) எனும் மைத்துனர்களின் அருந்துணையுடனும் மகிழ்வாய் இல்லறம் நடந்தது.

வேதனைகள், சோதனைகள், சாதனைகள் என மனித வாழ்வின் இயல்புச் சக்கரத்தின் பாரம் பட்டு வாழ்ந்தவருக்கு மிக நீண்டகாலம் பிள்ளைச் செல்வம் இல்லாதிருந்த குறை நெஞ்சில் இருந்தது. நீண்ட காலத்தின் பின் இறைவனின் அருட்பார்வையினால் மகளொன்றிற்குத் தாயாகி அக்குறையும் நீங்க காலங்கள் உருண்டன.

கணவரின் பணிகள் அனைத்திற்கும் உரமூட்டும் துணையாய் உதவுபவராய் அவரின் சாதனைகளுக்குத் துணை நின்று மகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணங்கண்டு மகளின் வளர்ச்சியிலும் வாழ்விலும் துணையாய் நின்று 1994 இல் கணவரின் பிரிவுடன் துணைபிரிந்த அன்றிலாக ஒடுங்கி உயிர் வாழ்ந்த போதும் பேரக்குழந்தைகளை மடியில் கண்டு நரை, திரை, மூப்பு, சாக்காடு என்பது நாம் விரும்பாவிடினும் எம்மைச் சேரும் என்ற நியதியின்படி எண்பத்திரண்டு அகவை நிறைவின் முதுமையின் அணைப்பில் ஆழ்ந்து இவ்வுலக வாழ்வு போதுமென்று இறைவனை இதயத்தால் இறைஞ்சினாரோ என்னவோ துன்பமோ, துடிப்போ இன்றி இறைவனின் பாதங்களை நாடி தைத்திங்கள் இருப்பத்தேழாம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார்.

அன்னையின் பிரிவென்பது ஆறாத்துயர் தருவது. அதனை மறப்பதென்பது சாத்தியமற்றது. அதனை ஏற்றுக்கொண்டு வாழ்வது மட்டும் தான் முடியும். மாறாத இந்த உலக நியதியை ஏற்று அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் இருகரம் கூப்பிப் பிரார்த்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் பெட்டகம்

## உலக நாடுகளின் பாராளுமன்றத்தின்பெயர்கள்

| | | |
|---|---|---|
| 01. இலங்கை | - | பாராளுமன்றம் |
| 02. ஆப்கானிஸ்தான் | - | கோறா |
| 03. ஐக்கிய இராச்சியம் | - | பாராளுமன்றம் |
| 04. சீனா | - | தேசிய மக்கள் காங்கிரஸ் |
| 05. டென்மார்க் | - | பொகெற்றிங் |
| 06. ஹங்கேரி | - | தேசிய சபை |
| 07. இந்தியா | - | லோக்சபா |
| 08. ஈரான் | - | மஜ்லிஸ் |
| 09. அயர்லாந்து | - | டயஸ் |
| 10. யப்பான் | - | டயற் |
| 11. ரஷ்யா | - | சுப்ரீம் சோவியத் |

## உலக நாணயங்கள்

| | | |
|---|---|---|
| 01. இந்தியா | - | ரூபா |
| 02. இலங்கை | - | ரூபா |
| 03. அமெரிக்கா | - | அமெரிக்க டொலர் |
| 04. அவுஸ்திரேலியா | - | அவுஸ்திரேலிய டொலர் |
| 05. பங்களாதேஷ் | - | டாக்கா |
| 06. பர்மா | - | கயற் |
| 07. கனடா | - | கனடா டொலர் |
| 08. எகிப்து | - | எகிப்து பவுண் |
| 09. பிரான்ஸ் | - | பிராங் |
| 10. பிலப்பைன்ஸ் | - | பேசோ |
| 11. மேற்கு ஜேர்மனி | - | மார்க் |
| 12. இந்தோனேசியா | - | ரூப்பியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இஸ்ரேல் - செக்கெலஸ்
14. ஐக்கிய இராச்சியம் - ஸ்ரேலிங் பவுண்
15. யப்பான் - யென்
16. கென்யா - கிலிங்
17. தென்கொரியா - வொன்
18. மலேசியா - றிங்கிற்
19. நெதர்லாந்து - கில்டர்
20. நேபாளம் - ரூபா
21. பாகிஸ்தான் - ரூபா

## உலகின் புகழ் பெற்ற கண்டுபிழப்பாளர்கள்

01. நிக்லஸ் கொபர் நிகஸ் (1473-1543)
போலந்து தேசத்தவர்.
பூமி சூரியனைச்சுற்றி வருவதைத் தெரிவித்தார்.

02. மேரிகியூரி (1867-1934)
போலந்து தேசத்தவர்.
றேடியக்கதிர் வீச்சைக் கண்டுபிடித்தார்.

03. சாள்ஸ்டாவின் (1809-1882)
பிரித்தானியர்.
உயிர்கள் சூழலுக்கேற்ப கூர்ப்படைகின்றன என்பதைத் தெரிவித்தார்.

04. தோமஸ் அல்வா எடிசன் (1847-1931)
அமெரிக்கர்.
மின்குமிழ், ஒலிப்பதிவு என்பவற்றைக் கண்டு பிடித்தார்.

05. R.மக்மிலன் (1839)
ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்.
சைக்கிள் இவர் கண்டுபிடிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வில்லியம் கூட்ஸ் (1839)
அமெரிக்கர்.
சட்டை ஊசியைக் கண்டுபிடித்தவர்.

07. மிற்றகோயர் (1864)
அவுஸ்திரேலியர்.
தட்டச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்.

08. பெஞ்சமின் பிராங்ளின் (1706-1720)
அமெரிக்கர்.
இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர்.

09. எட்மன் ஹேலி (1656-1742)
வால் நட்சத்திரம் பற்றிக் கண்டுபிடிப்புகள் நிகழ்ததியவர்.

10. எட்வேட்ஜெனர் (1749-1923)
பிரித்தானியர்.
அம்மை நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றும் முறையைக் கண்டுபிடித்தவர்.

11. ஐசாக் நியூட்டன் (1642-1727)
பிரித்தானியர்.
புவியீர்ப்புப் பற்றிய கொள்கைகளைக் கண்டுபிடித்தவர்.

12. லூயிபாஸ்ரர் (1867-1934)
பிரான்சியர்.
நுண்ணங்கிகள் உணவு பழுதடைதலைத்தூண்டுகின்றன என்பதைத்க் கண்டுபிடித்தவர்.

13. அல்பெட் ஐன்ஸ்ரீன்
ஜேர்மனியர்.
புவியின் பௌதிக விசைகளின் நுட்பம், மின்னியல் பற்றிய கண்டுபிடிப்புகள் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அலெக்சாண்டர் பிளெமிங் (1853-1955)
பிரித்தானியர்.
பென்சிலின் தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர்.

15. ஜோன்சன் (1590-11629)
ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.
நுணுக்குக் காட்டியைக் கண்டுபிடித்தார்.

16. வில்லியம் ஹாவே (1629)
பிரித்தானியர்.
மனித உடலின் இரத்தச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர்.

17. சீ.ஹேரசன்ஸ் (1639)
ஒல்லாந்தர்.
சுவர் மணிக்கூட்டைக் கண்டுபிடித்தவர்.

18. டீ.பஸ்றோ (1776)
அமெரிக்கர்.
நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்தவர்.

19. ர.ஜே.கனேரிங் (1797)
பிரான்சியர்.
பரசூட்டைக் கண்டுபிடித்தவர்.

20. ஜே.போகில்ஸ் (1834)
பிரித்தானியர்.
குளிர்பதனப்பெட்டியைக் கண்டுபிடித்தவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் புகழ் பெற்ற நாடுகாண் பயணங்களை மேற்கொண்டவர்கள்.

01. வாஸ்கொடகாமா (1469-1524)
போர்த்துக்கேயர், இந்தியாவைக் கண்டுபிடித்தவர்.

02. பல்போவா (1479-1519)
ஸ்பானியர், பசுபிக் சமுத்திரத்தைக் கண்டறிந்தவர்.

03. கிறிஸ்டொபர் கொலம்பஸ் (1465-11908)
இத்தாலியர், மேற்கிந்தியத் தீவுக் கூட்டங்களில் ஒன்றான ஹிஸ்பனியோலாவைக் கண்டு பிடித்தவர்.

04. அமெரிக்கோ வெஸ்புச்சி (1451-1522)
இத்தாலியர், வடஅமெரிக்காவின் பிரதான நிலப்பகுதியைக் கண்டுபிடித்தவர்.

05. ஜேம்ஸ்குக் (1728-1779)
பிரித்தானியர், அவுஸ்ரேலியாவைக் கண்டு பிடித்தவர்.

06. பேடினன்ட் மகலன் (1480-1521)
போர்த்துக்கேயர், கடல்மார்க்கமாக பயணஞ்செய்து பூமியை வலம் வந்தவர்.

07. எட்மன்ட் ஹிலாரி (1919)
நியூசிலாந்தைச் சேர்ந்தவர், எவரெஸ்ற் சிகரத்தை ஏறிச் சென்றடைந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அமைப்புக்கள்

01.ஆசியான் :- (தென்கிழக்காசிய நாடுகளுக்கான கூட்டமைப்பு) 1967 ல் உருவாக்கப்பட்டது. தமக்கிடையே பொருளாதார, சமூக, கலாசார கூட்டுறவிற்காக உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்கள் :- புருனை, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்.

02. கொமன் வெல்த் :-1949 ல் உருவாக்கப்பட்டது. முன்னைய பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகள் அனைத்தும் இதன் உறுப்பினராக உள்ளன.

03. ஐரோப்பிய யூனியன் :- 1967 ல் உருவாக்கப்பட்டது. தமக்கிடையே பல்தரப்பட்ட துறைகளிற்கான ஒத்துழைப்பிற்காக உருவானது.
உறுப்பினர்கள் :- அவுஸ்ரேலியா, பெல்ஜியம், அயர்லாந்து, இத்தாலி, ஸஇபெயின், சுவீடன், ஐக்கியராச்சியம்.

04. ஒபெக் :- (பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு) 1960 ல் உருவானது.
உறுப்பினர்கள் :- அல்ஜீரியா இந்தோனேசியா, ஈரான், ஈராக்,குவைற், லிபியா, நைஜீரியா, கட்டார், சவூதி, அராபியா, யு.ஏ.ஈ(ஐக்கிய அரபு எமிற்றேற்) வெனிசுலா, பெற்றோலிய விலை நிர்ணயமே இதன் பிரதான நோக்கம்.

05. ஐக்கிய நாடுகள் தாபனம் :- 1945ல் உருவாக்கப்பட்டது. உலகின் சமாதானத்தைப் பேணுவதே பிரதான நோக்கம். இதன் கீழ் 185 இற்கும் மேற்பட்ட நாடுகள் உறுப்பினராக உள்ளன. இதன் கீழ் உலக சுகாதார தாபனம் யுனிசெப், அகதிகட்கான புனர்நிர்மாண அமைப்பு, உலக உணவு தாபனம், உலக வியாபார அமைப்பு எனப்பல உப நிறுவனங்கள் உலகிற்குப் பெரும்பங்களிப்புச் செய்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மாநிலங்கள்.

01. ஆந்திரா
02. அருணாச்சல்
03. அசாம்
04. குஜராத்
05. பீகார்
06. ஜார்கண்ட்
07. ஹரியானா
08. ஹிமாசல்
09. கர்நாடக
10. ஜம்மு காஷ்மீர்
11. கேரளா
12. மத்திய பிரதேசம்
13. சதீஸ்கர்
14. மணிப்பூர்
15. மகாராஷ்டிரா
16. மேகலாயா
17. மிஜோராம்
18. ஒரிசா
19. நாகாலாந்து
20. பஞ்சாப்
21. கோவா
22. ராஜஸ்தான்
23. தமிழ்நாடு
24. சிக்கிம்
25. திரிபுரா
26. உத்தரம்
27. மேற்கு வங்காளம்
28. உத்தராஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

13 ❖ 01 ❖ 1929



மறைவு

27 ❖ 01 ❖ 2009

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திரு.தணிகாசலம் ானந்தம் அவர்களின்

அன்பு மாமியார்

## திருமதி.மங்களநாயகி பொன்ன ்லம்

தாயாக இருந்து எம்மை
தனித்துணையாய்க் காத்திருந்தீர்
நோய் வந்த போதும் எமை
நோக வைத்ததில்லையம்மா
யாரைத்தான் நோவதினி
காலத்தின் முடிவன்றோ......

அன்னாரின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/தம்பசிட்டி மெதடிஸ்தமிசன் தமிழ் கல்வன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

அருணாசலம் சுப்பிரமணியம் + இராசபூதம் நாகலிங்கம்

- மங்களநாயகி
- வைத்தியகலாநிதி Dr.தணிகாசலம் (இருதய சிகிச்சை நிபுணர்) ஐக்கிய அமெரிக்கா
- இராமலிங்கம் (வர்த்தகர் கண்டி)
- அருளிங்கம் (அமரர்)
- பூரணாதேவி (ஓய்வு பெற்ற வைத்திய தாதி)

ஆறுமுகம் + நாகமுத்து

- பொன்னம்பலம் (அமரர்) (ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு இருதயக்கல்லூரி)

மங்களநாயகி + பொன்னம்பலம்

- தனலக்குமி + சிவானந்தம்
  - ஹரியர்த்தன்
  - அநிருத்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



உற்ற துன்பத்தில் ஓடிவந்து உதவுவது என்பது உயரிய பண்பு. எமது இழப்பின் துயரகாலத்தில் ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அனைவருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். வைத்திய உதவிகள் நல்கித் துன்பம் வரும் போது துயர் துடைத்த வைத்தியப் பெருந்தகை Dr.திரு.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் இதயம் நெகிழ நன்றி கூறுகின்றோம். எமது துயரில் பங்கு கொண்டு துணை நின்ற யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைச் சமூகத்திற்கும், யா/தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலைச் சமூகத்திற்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இந்த நினைவு மலரை அழகுற அமைத்துத் தந்த ஐங்கரன் ஓவ்செற் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இன்று எமது அழைப்பை ஏற்று இவ் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

210, " செந்தூர் "
தம்பசிட்டி வீதி.

குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகின்றது
இதுவே உலகநியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

ஐங்கரன் ஓவ்[f] செற், சிலையடி, மந்திகை. T.P No : 021 226 3641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org